# யா/பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம்



## வருடாந்த பரிசளிப்பு விழாத் தொகுப்பு
## 2024

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/பிரான்பற்று
# கலைமகள் வித்தியாலயம்

## பரிசளிப்பு விழாத் தொகுப்பாக்கம் - 3

2024

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரான்பற்று கிராம அபிவிருத்தி ஒன்றியம்
Piranpattu Rural Development Society
London, England.

தலைவர்: ந. விஜயேந்திரன்
செயலாளர்: க. ஸ்ரீஸ்கந்தராசா
உதவி செயலாளர்: வ. சந்திரன்
பொருளாளர்: க. ஜெயபாலன்
உதவி பொருளாளர்: க. இரத்தினராசா

# ஆசியுரை

பிரான்பற்று கலைமகள் வித்தியாலயத்தின் 2024 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பரிசளிப்பும் பாராட்டு விழாவிற்கும் “பிரான்பற்று கிராம அபிவிருத்தி ஒன்றியம், இலண்டன்” அமைப்பின் வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

எமது ஒன்றியமானது 2002 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது முதல் இன்றுவரை எமது மக்களது குறிப்பாக மாணவர்களது கல்வி, தொழிற்கல்வி, மொழித்தேர்ச்சி போன்றவற்றை விருத்தி செய்வதனையும், கிராம மக்களிற்கு பொருளாதார மற்றும் சமூகநல சேவைகளை வழங்கி வாழ்வாதார மேம்பாட்டை ஏற்படுத்தும் நோக்கிலும் செயற்றிட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம். கல்வி மற்றும் விளையாட்டுத்துறை வளர்ச்சி நோக்கில் எமது கலைமகள் வித்தியாலயத்திற்கு தொடர்ந்து பங்களிப்பு வழங்கி வருகின்றோம்.

இவ்வருட பரிசளிப்பு விழாவுக்கு எமது ஒன்றியத்தின் ஊடாக திரு. கந்தசாமி ஸ்ரீஸ்கந்தராசா அவர்களிடமிருந்து 15 புத்தகப் பைகள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன. மைதான அபிவிருத்தி மற்றும் பாடசாலை பௌதிக வள அபிவிருத்தி என்பவறில் எதிர்வருங்காலங்களிலும் எமது ஒன்றியம் தொடர்ந்தும் பங்களிப்புச் செய்யும் என உறுதியளிக்கின்றோம்.

மேலும் இப்பரிசளிப்பு விழாவில் பரிசு பெறும் மாணவர்களையும் க.பொ.த.சா.தர பரீட்சையில் 9A எடுத்த மாணவர்களையும், ஏனைய திறமைச்சித்தி பெற்ற மாணவர்களையும், விளையாட்டு நிகழ்வுகளில் 2024 ஆண்டு தேசிய போட்டிகளிலும் ஏணைய போட்டிகளிலும் பங்குபற்றிய மற்றும் வெற்றியீட்டிய மாணவர்களையும், பாராட்டி வாழ்த்துகின்றோம். அத்துடன் பாடசாலை வளர்ச்சிக்கு பங்களித்து வரும் அதிபர், ஆசிரியர், மற்றும் பாடசாலைச் சமூகத்தினர் அனைவருக்கும் எமது ஒன்றியத்தின் வாழ்த்துகளையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உறவுக்கு கை கொடுப்போம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்ச்சி நிரல்

1) **விருந்தினர்களை வரவேற்றல்**
2) **கொடியேற்றல்** 1) தேசியக்கொடி - பிரதம விருந்தினர்
2)பாடசாலைக்கொடி - பாடசாலை முதல்வர்
3) **தேசிய கீதம், பாடசாலைக் கீதம் இசைத்தல்**
4) **மங்கல விளக்கேற்றல்**
1) பிரதம விருந்தினர்
2) சிறப்பு விருந்தினர்
3) கௌரவ விருந்தினர்
4) பாடசாலைச் சமூகம் சார்பில்
5) ஆசிரியர் சார்பில்
5) **இறைவணக்கம்**
6) **வரவேற்புரை**
7) **வரவேற்பு நடனம்**
8) **சிறப்பு விருந்தினர் ஆசியுரை**
9) **தலைமையுரையும் அதிபர் அறிக்கையும்**
10) **ஆங்கில அபிநயப்பாடல்**
11) **சிறப்புப் பரிசில் வழங்குதல்**
12) **கௌரவ விருந்தினர்**
13) **சிங்கள அபிநயப்பாடல்**
14) **சிறப்புப் பரிசில் வழங்கல்**
15) **கும்மி நடனம்**
16) **நாடகம்**
17) **பிரதம விருந்தினர் உரை**
18) **நன்றியுரை**
19) **பரிசில் வழங்கல்**
20) **பாடசாலைக் கீதம்**
21) **கொடியிறக்கல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலையின் அடிப்படைத் தகவல்கள்

**மகுடவாசகம் :-** "கற்றவர்க்கே சென்ற இடமெல்லாம் சிறப்பு"

## பாடசாலையின் தூரநோக்கு - VISION

நவீன தகவல் தொழில்நுட்ப அறிவியல் சமூகத்துடன் இணைந்து கொள்வதற்கும் தேசிய ரீதியில் தரமான கல்வி பெற்ற நற்பிரஜையாக மிளிர்வதற்கும் இணைந்து செயலாற்றுதல்.

## பாடசாலையின் பணிக்கூற்று – MISSION

கல்விச் செயற்பாடுகள் மற்றும் இணைபாடவிதான செயற்பாடுகளின் ஊடாகச் சமூகப் பொருத்தப்பாடும் ஆளுமைப் பண்புவிருத்தியும் நவீன உலகிற்கு ஏற்ற திறன்களையுமுடைய மாணவர்களை உருவாக்குதல்.

1. பாடசாலையின் பெயர் :- யா/வலி/பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம்
2. பாடசாலையின் முகவரி :- பிரான்பற்று, பண்டத்தரிப்பு.
3. கிராம உத்தியோகத்தர் பிரிவும் இலக்கமும் :- பிரான்பற்று கிழக்கு J/147
4. பிரதேச செயலாளர் பிரிவு :- வலி தென்மேற்கு, சண்டிலிப்பாய்
5. பாடசாலைக் குறியீட்டு இல. :- 1012007
6. தொகைமதிப்பீட்டு இல. :- 09099
7. பரீட்சை இலக்கம் :- 11266
8. பாடசாலை வகை :-Type II
9. வகுப்புக்களின் பரம்பல் :- தரம் 1 – 11 வரை
10. பிரதான மொழி மூலம் :- தமிழ்
11. Bilinqual கற்கையுள்ளதா :- இல்லை
12. தொலைபேசி இலக்கம் :- 021 225 2199
13. தொலைநகல் இலக்கம் :- இல்லை
14. மின்னஞ்சல் முகவரி :-jpkalaimagal18@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொகுப்பாக்கம் தொடர்பாக

**பொறுப்பாசிரியர்**
**திருமதி.ரூ.கவிதாசன்**

எமது பாடசாலை மாணவர்களின் அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றை மேம்பாடடையச் செய்யும் வகையில் வருடாந்தம் நடைபெறும் பரிசளிப்பு விழாவிலே கடந்த வருடங்களில் இடம் பெற்ற நிகழ்வுகள், செயற்பாடுகள், சாதனைகள் என்பவற்றைத் தொகுத்து அறிக்கைகளாக முன்வைப்பபது ஆவணப்படுத்தலின் முக்கிய அம்சமாகும் அந்த வகையில் கலைமகளின் வருடாந்த நிகழ்வுகளை தாங்கி வரும் இவ்வாக்கமானது பாடசாலையின் வளர்ச்சி சாதனைகள் தேவைகள் என்பவற்றைச் சமுகத்திற்கு அறியத்தருவதோடு அபிவிருத்திக்கு ஊன்று கோலாக அமையும் என்ற நோக்கத்துடன் இதனை வெளியிடுவதில் பெருமகிழ்வடைகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர் அறிக்கை

பிரபஞ்சமெலாம் அருளாட்சிபுரியும் இறையருள் பிரான்பற்றில் பெரியவளவு முருகனாகவும், முத்துமாரியம்மனாகவும் அருளாட்சிபுரிந்து பிரான்பற்று புகழை மேம்படுத்தி வருவதனையிட்டு மகழவுடன் வணங்கி கலைமகளின் பாதர விந்தங்களில் எமது தொகுப்பினைச் சமர்பித்து 2024 ஆண்டுக்குரிய வருடாந்த பரிசளிப்பு விழாவின் அதிபர் அறிக்கையை சமர்ப்பிப்பதில் பெருமையடைகின்றேன்.

இவ்விழாவின் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற வடபிராந்திய விவசாயத் திணைக்கள ஆராய்ச்சி அபிவிருத்திப் மேலதிக பணிப்பாளர் ஸ்ரீஸ்வரலிங்கம் ராஜேஸ்கண்ணா அவர்களே, ஆசியுரை நிகழ்த்தி அமர்ந்திருக்கும் பெரியவளவு ஸ்ரீ முருகன் ஆலய குருக்கள் இந்துஜன் சர்மா அவர்களே, சிறப்பு விருந்தினராகக் கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் திரு.க.சிவகரன் அவர்களே, கௌரவ விருந்தினர்களாக கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் திருமதி.க.ரூபினி மற்றும் திருமதி ம. பிரகாஜினி அவர்களே ஓய்வுநிலை உத்தியோகத்தர்களே, அயற்பாடசாலை அதிபர்களே, ஆசிரியர்களே, நலன்விரும்பிகளே, பெற்றோர்களே, சமூகப்பெரியோர்களே, பழைய மாணவர்களே, மாணவச் செல்வங்களே அனைவருக்கும் எனது இனிய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிரதம விருந்தினராக வருகை தந்திருக்கும் வடபிராந்திய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மேலதிக பணிப்பாளராகவும் மற்றும் கிளிநொச்சி மாவட்ட விவசாயப் பணிப்பாளராகவும் கடமையாற்றி இவ்வூருக்கு பெருமைசாற்றும் ஸ்ரீஸ்வரலிங்கம் ராஜேஸ்கண்ணா அவர்கள் ஆரம்பக் கல்வியை யா/பண்டதரிப்பு மகளிர் கல்லூரியிலும்(1-5), இடைநிலை மற்றும் உயர் கல்வியை யா/புனித ஹென்றியரசர் கல்லூரியிலும் கற்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் விவசாய விஞ்ஞானமாணி (B.Sc. Agri.) பட்டத்தினையும் பேராதெனியா பல்கலைக்கழகத்தில் முதுமாணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(M.Sc) பட்டத்தினையும் பெற்றுகொண்டதுடன். சுவிஸ்லாந்தில் M.As. பட்டத்திளையும் பெற்று எமது கிராமத்திற்கு பெருமை சேர்தவராவார்.

தற்போது கலாநிதி பட்டப்படிப்பினை பெரதெனியா பல்கலைக்கழகத்தில் தொடர்ந்து கொண்டிருக்கின்றார். திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி திணைக்களத்தில் உதவிப்பணிப்பாளராகக் கடமையை தொடந்த அவர்கள் முருங்கன் நெல் ஆராய்ச்சி நிலையத்தில் பிரதிப்பணிப்பாளராகவும், கிளிநொச்சி பிராந்திய ஆராய்ச்சித் திணைக்களத்தில் உதவிப் பணிப்பாளராகவும் பணியாற்றியவர். தேசிய மற்றும் சர்வதேசிய ரீதியில் 20 மேற்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகளை ஆய்வு இதழ்களில் வெளியிட்டுள்ளார். இக்கிராமத்தை சேர்ந்த மதிப்பிற்குரிய ஸ்ரீஸ்வரலிங்கம் ராஜேஸ்கண்ணா அவர்கள் பிரதம விருந்தினராக வருகை தந்திருப்பது எமக்குப் பெருமையாகவும் மாணவர்களுக்கு முன்னுதாரணமாகவும் உள்ளமை குறிப்பிடப்பட்டது.

இன்றைய நிகழ்வுக்கு சிறப்புவிருந்தினராக கலந்து கொண்டிருக்கும் திரு.கணேசபிள்ளை. சிவகரன் அவர்கள் யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் கல்வி கற்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் புவியில் சிறப்புக் கலைமாணி - B.A.(Hons) பட்டத்தை முடித்துக் கொண்டு யாழ்பல்கலைக்கழகத்தில் போதனாசிரியராகவும், கிழக்குப்பல்கலைக் கழகத்தில் உதவி விரிவுரையாளராகவும் பணியாற்றி அதன் பின்னர் யா/மகாஜனாக் கல்லூரியில் ஆசிரியராகப் 10 வருடங்கள் பணியாற்றி தற்பொழுது வலிகாமம் கல்வி வலயத்தில் சேவைக்கால ஆசிரிய ஆலோசகராகப் பணியாற்றி வரும் இவர் எமது பாடசாலையின் வலயப் பிரதிநிதியாகவும் செயற்பட்டுள்ளார்.

கௌரவ விருந்தினராக வருகை தந்து கௌரவித்துக் கொண்டிருக்கின்ற திருமதி. கவிதாஸன் ரூபினி அவர்கள் தனது கல்வியை யா/வீமன்காமம் மகா வித்தியாலயத்திலும் மற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யா/இராமநாதன் கல்லூரியிலும் கற்று யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் சிறப்புக் கலைமாணி (B.A - Hones) பட்டத்தையும் பெற்றவர். இவர் வ/சின்னபூவரசன்குளம் விக்னேஸ்வாரா மகா வித்தியாலயத்திலும் யா/அல்லப்பிட்டி பராசக்கதிவிதியாலயத்திலும் ஆசிரியராகவும் அதன் பின்னர் எமது பாடசாலையில் 2015 இல் முதல் ஆசிரியராகவும் பதில் உதவி அதிபராகவும் சிறப்பாகச் சேவையாற்றி 2025 முதல் இடமாற்றம் பெற்று தற்போது யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப்பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றி வருகின்றார்.

மற்றுமொரு கௌரவ விருந்தினராக வருகை தந்து கௌரவித்துக் கொண்டிருக்கின்ற திருமதி. மாவிரதன் பிரகாஜினி அவர்கள் ஆரம்பக் கல்வியை யா/யூனியன் கல்லூரியில் கற்று பின்னர் யாழப்பாண உயர்தேசிய நிறுவகத்தில் கணக்கியல் டிப்ளோமா (HNDA) பட்டத்தினைப் பெற்றார். இவர் களு/பாணந்துறை ஜீலான் மத்தியகல்லூரியிலும், யா/யூனியன் கல்லூர்யிலும், யா/ஏளாலை மத்தியகல்லூரியிலும் ஆசிரியராகவும் சேவையாற்றி அதன் பின்னர் எமது பாடசாலையிலும் 2021 இல் முதல் ஆசிரியராகவும் பதில் உதவி அதிபராகவும் சிறப்பாகச் சேவையாற்றி 2024 முதல் இடமாற்றம் பெற்று தற்போது யா/ஏழாலை மகா வித்தியாலயத்தில் ஆசிரியராகக் கடமையாற்றி வருகின்றார்.

## எங்கள் பாடசாலையின் விபரங்கள்

எமது பாடசாலை வலிகாமம் கல்வி வலயத்தில் சண்டிலிப்பாய்க் கோட்டத்தில் உள்ளடங்குகின்ற வகை II பாடசாலையாகும். 117 ஆண்டுகள் நிறைவடைந்த இப்பாடசாலை இன்று 208 மாணவர்களுடன் முன்னேற்றம் கண்டுவரும் பாடசாலையாகவுள்ளது. பாடசாலையின் அபிவிருத்திப் பாதையில் வளவாய்ப்புகள், பலம், பலவீனமான விடயங்கள் போன்றவற்றை நோக்குவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பௌதிக வளங்கள்

- பிரதான மாடிக் கட்டிடம் 1- 160 X 20 அடி
- மண்டப கட்டிடம் -90 X 20 அடி
- கட்டிடம் 2 -50 X 20 அடி
- அழகியல் கூடக்கட்டிடம் - 40 X 20 அடி
- மாணவர் மலசலகூடக்கட்டிடம் (ஆண்) 1 - 27 X 15 அடி
- மாணவர் மலசலகூடக்கட்டிடம் (பெண்) 1 - 27 X 15 அடி
- ஆசிரியர் மலசலகூடம் (ஆண்) 14 x 09
- ஆசிரியர் மலசலகூடம் (பெண்) 14 x 09
- ஆசிரியர் மலசலகூடம் (பொது) 14 x 09
- மாணவர் விளையாட்டுப் பூங்கா
- சிமாட் (திறன்) வகுப்பறை 2 உண்டு.
- நூலகம் இல்லை.
- நீர்த்தாங்கி - உண்டு.
- கணினிக் கூடம் - உண்டு ஆனால் பற்றாக்குறையாக உள்ளன.

## மனிதவளம்

2024 இல் இப்பாடசாலையில் 208 மாணவர்கள் கற்றுவருகின்றனர். இவ்வருடம் 21 மாணவர்கள் தரம் 01 இல் இணைந்துள்ளனர். மாணவர் சேர்வு வீதம் அதிகரித்து வருகின்றமை பாடசாலையின் வளர்ச்சி நிலையை காட்டுகின்றது.

| 2020 | 2021 | 2022 | 2023 | 2024 |
| --- | --- | --- | --- | --- |
| 14 | 13 | 12 | 15 | 21 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர் விபரம் 2024

| தரம் | ஆண் | பெண் | மொத்தம் | இந்து சமயம் | கத் /கிறிஸ் தவம் |
|---|---|---|---|---|---|
| 01 | 11 | 10 | 21 | 21 | 00 |
| 02 | 04 | 11 | 15 | 15 | 00 |
| 03 | 07 | 05 | 12 | 12 | 00 |
| 04 | 08 | 05 | 13 | 13 | 00 |
| 05 | 07 | 09 | 16 | 16 | 00 |
| 06 | 07 | 09 | 16 | 16 | 00 |
| 07 | 07 | 07 | 14 | 14 | 00 |
| 08 | 14 | 04 | 18 | 18 | 00 |
| 09 | 16 | 09 | 25 | 25 | 00 |
| 10 | 09 | 12 | 21 | 21 | 00 |
| 11 | 12 | 04 | 16 | 16 | 00 |
| 11R | 06 | 15 | 21 | 21 | 00 |
| **மொத்தம்** | **108** | **100** | **208** | **208** | **00** |

## ஆசிரியர் மற்றும் ஆளணி வளம்

எமது பாடசாலையில் சிறப்பான ஆசிரியர் வளம் காணப்படுகின்றது. நான் அதிபராகப் பதவியேற்றபோது கணிதம், ICT, ஆரம்பக்கல்வி போன்ற பாடங்களிற்கு ஆசிரியர் வளம் பற்றாக்குறையாக இருந்தது. பெருமளவில் சிறப்பான ஆசிரியர் வளம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. எனினும் தற்போது வரலாறு, புவியியல், ஆரம்பப் பிரிவு ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கு ஆசிரியர்கள் இன்மை பெரும் குறைபாடாக உள்ளது. எமது பாடசாலையில் தற்போது 20 நிரந்தர ஆசிரியர்களும், தற்காலிக இணைப்பிலுள்ள ஒரு ஆசிரியரும் கடமையாற்றுகின்றனர். அவ்வாசிரியர்கள் விபரம் இணைக்கப்பட்டுள்ளது.

இவ்வாசிரியர்கள் பாடசாலை செயற்பாடுகளிலும் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளிலும் ஆற்றிவரும் பங்களிப்புகளை பாராட்டி அவர்களின் வினைத்திறனான சேவை மேலும் பாடசாலைக்கு கிடைக்கவேண்டும் என வேண்டுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இல | பெயர் | கல்வித் தகமை, தொழிற் தகமை | நியமனப் பாடம் | சேவைக் காலம் |
|---|---|---|---|---|
| **அதிபர்** | | | | |
| 01 | திரு. சோ. ஸ்ரீகிருஸ்ணா | BA (Hons)2nd Upper PGDE (Merit) M.Ed (2nd Upper) DSM (Merit) | சமூகக்கல்வி இலங்கை அதிபர் சேவை தரம் 2 SLPS - 2 | 16 |
| **ஆசிரியர்கள்** | | | | |
| 02 | திருமதி. க. ரூபினி | B.A (Hons) 2nd Upper PGDE (Merit) | கலைப்பாடங்கள் SLTS - 1 | 19 |
| 03 | திரு. இ. கஜேந்திரன் | B.F.A. | சித்திரம் SLTS – 2-II | 13 |
| 04 | திருமதி. அ. சர்வாஜினி | B.A (General) PGDE | ஆரம்பக் கல்வி SLTS – 2-I | 19 |
| 05 | திருமதி. யூ. அமிர்தவர்ஷினி | க.பொ.த.(உ/த) ,பயிற்றப்பட்ட ஆசிரியர | ஆரம்பக் கல்வி SLTS – 1 | 22 |
| 06 | திருமதி. ப. கந்ததர்சினி | BED | தமிழ் SLTS – 2-I | 18 |
| 07 | திருமதி. வே. றமணி | B.A. PGDE | ஆரம்பக் கல்வி SLTS – 1 | 19 |
| 08 | திருமதி. ஜெ. றெஜினா | B.A | ஆரம்பக் கல்வி SLTS – 1 | 21 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | |
|---|---|---|---|---|
| 09 | திரு. அ. பிரசன்னா | B.SC PGDE | கணிதம் SLTS – 2-II | 09 |
| 10 | திருமதி. றா. துர்யா | B.SC PGDE | ICT SLTS – 2-II | 09 |
| 11 | திருமதி. ர. கலைவாணி | க.பொ.த.(உ/த) ,பயிற்றப்பட்ட ஆசிரியர் | ஆரம்பக் கல்வி SLTS – 2-II | 11 |
| 12 | திருமதி. கே.றாஜி | BA (Hons) PGDE | வழிகாட்டலும் ஆலோசனையும் SLTS – 1 | 17 |
| 13 | திருமதி. க. அனுசலா | க.பொ.த.(உ/த) கற்பித்தலில் தேசியடிப்ளோமா | சங்கீதம் SLTS – 2-I | 17 |
| 14 | திருமதி. ஜெ. சாந்தகுமாரி | B.A | வாழ்க்கைத்திறன் SLTS – 1 | 34 |
| 15 | திருமதி.வி. சோமகோஜனி | B.F.A | பரதநாட்டியம் SLTS – 1 | 18 |
| 16 | திரு.வி. ஜெயராசா | கற்பித்தலில் தேசியடிப்ளோமா PGDE | நாடகமும் அரங்கியலும் SLTS – 2-II | 11 |
| 17 | திருமதி. வி. நாகேஸ்வரி | B.Ed | விஞ்ஞானம் SLTS – 2-II | 09 |
| 18 | திரு. ம. சந்துரு | B.Ed | விஞ்ஞானம் SLTS – 2-II | 12 |
| 19 | திரு. சி. பிரதாப் | க.பொ.த.(உ/த) ,பயிற்றப்பட்ட ஆசிரியர் | SLTS – 3(இ) | 04 |
| 20 | திருமதி ர.கீர்த்திகா | BA (Hons) | தமிழ் SLTS – 2-II | 08 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | |
|---|---|---|---|---|
| **தற்காலிக இணைப்பில் உள்ள ஆசிரியர்** | | | | |
| 20 | திருமதி. பி. மேனகா | B.A. PGDE | மனைப்பொருளியல் | 07 |
| **தற்காலிக இணைப்பில் சென்ற ஆசிரியர்** | | | | |
| 21 | திருமதி.ஜெ. இன்பநிதி | B.F.A PGDE, M.Ed | பரதநாட்டியம் | 16 |
| **கல்வி சாரா ஆளணியினர்** | | | | |
| 22 | திருமதி. றெ. மரியஜெயதாரணி | க.பொ.த. (சா/த) | பாடசாலைப் பணியாளர் | 23 |
| 23 | செல்வி. இ. பில்விறிற் டியூறியா | க.பொ.த. (உ/த) | விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் | 03 |
| 24 | திரு.து.பிரகலாதன் | க.பொ.த. (சா/த) | காவலாளி | 09 |

## பாடசாலையின் நிர்வாகமும் மேற்பார்வையும்

அதிபர் சோ.ஸ்ரீகிருஸ்ணா ஆகிய எனது தலைமையின் கீழ் எமது பாடசாலையின் முகாமைத்துவ குழு பொறுப்பாக இருந்து செயற்படுகின்றது. உப அதிபராக கடமையாற்றும் திருமதி ரூபினி கவிதாஸன் அவர்கள் நிர்வாகமும் மேற்பார்வையும் செயற்பாடுகளில் சிறப்பாக பங்குபற்றி வருகின்றார். ஆரம்பபிரிவுப் பகுதித் தலைவராக திருமதி யூட்கருணாகரன் அமிர்தவர்சினி அவர்களும் இடைநிலைப் பிரிவு பகுதித்தலைவராக திரு.இ.கஜேந்திரன் அவர்களும் தர இணைப்பாளர்களாக திரு.அ.பிரசன்னா மற்றும் திருமதி ப. கந்ததர்சினி அவர்களும் பங்காற்றி வருகின்றனர். பாடசாலையின் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழுவும், பாடசாலை கல்வி அபிவிருத்திக் குழுவும் பங்காற்றி வருகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெற்றோர்களின் பங்களிப்பு

கிராமியப்பாடசாலையான எமது பாடசாலை மாணவர்களுக்கு உரிய அனைத்துத் திறன்களையும் வழங்கக்கூடியவகையில் பெற்றோர்களது பங்களிப்பு வினைத்திறன் மிக்கதாக விளங்கவேண்டும். "கல்வியின் நிறைவு ஒழுக்கம்" என்பதனை மையமாகக் கொண்டு மாணவர்களை அறிவுப் பொருளாதார உலகின் சவால்களை எதிர்கொள்ளும் அறிவு மட்டுமன்றி திறனும் உடையவர்களாகவும் ஆளுமைகளை வளர்த்து அவர்களது தலைமைத்துவ திறன்களை மேம்படுத்துவதற்கும் பல்வேறு தந்திரோபாயச் செயற்றிட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம்.

எனவே பெற்றோர்கள் மாணவர்களது வரவு மற்றும் ஒழுக்கச் செயற்பாடுகளிலும் கூடிய கவனமெடுத்தச் செயற்பட வேண்டும். மாணவர் வரவு ஒழுங்கீனங்களையும் ஆடைச் சுத்தம், தலைமுடி ஒழுங்கு என்பவற்றையும் பெற்றோர்கள் கவனமெடுத்துச் செயற்படுத்த வேண்டும். மாணவர்கள் வீட்டில் கற்கும் நிலையை உறுதிப்படுத்த வேண்டும்.

## 2022 க.பொ.த. சாதாரண பரீட்சையில்

தொடர்ச்சியாக எமது மாணவர்கள் சிறப்பான சித்திகளைப் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர். 7A,B,C இணை உயர் புள்ளியாகப் பெற்று செல்வன் சு. செந்தூரன் மற்றும் ஆ.சிந்து ஆகிய இருவரும் பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர். மேலும் த.தமிழினி 6A,B.C.S சித்திகளைப் பெற்றுள்ளார். சித்தி வீதம் 45 வீதமாக உள்ளது. இச்சித்திகளைப் பெற்றுக்கொள்வதற்கு உறுதுணையாக இருந்த வகுப்பாசிரியர் திருமதி. க. ரூபினி அவர்களுக்கும் அவருடன் இணைந்து கற்பித்த ஏனைய ஆசிரியர்களுக்கும் பாராட்டுக்கள். புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி வீதம் குறைவாக இருக்கின்றமை எமக்கு ஒரு சவாலாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2023(2024) க.பொ.த. சாதாரண பரீட்சையில்**

பாடசாலை வரலாற்றிலேயே முதன்முறையாக இரு மாணவர்கள் 9A சித்திகளைப் பெற்று பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளனர் செல்வி மணிசேகரம் திவ்வியா மற்றும் மணிசேகரம் திலானி ஆகிய அவ்விரு மாணவிகளையும் பாராட்டி வாழ்த்துகின்றோம். 21 மாணவர்கள் தோற்றி 14 மாணவர்கள் க.பொ.த உயர்தரம் கற்க தகுதிபெற்றுள்ளதுடன் மூன்று மாணவர்கள் எதிர்கால தகுதிச் சித்தி பெறும் நிலையில் க.பொ.த உயர்தரம் கற்கக்கூடியதாக உள்ளது. எனவே 21 பேரில் 17 மாணவர்கள் உயர்தரம் கற்கச் சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது சித்தி வீதம் 67 வீதமாக உயர்வாக உள்ளது. இச்சித்திகளைப் பெற்றுக்கொள்வதற்கு உறுதுணையாக இருந்த வகுப்பாசிரியர் திருமதி.ப. கந்ததர்சினி அவர்களுக்கும் அவருடன் இணைந்து கற்பித்த ஏனைய ஆசிரியர்களுக்கும் பாராட்டுக்கள்.

**இணைப்பாடவிதானச் செயற்பாடுகளை நோக்குமிடத்து**

விளையாட்டுப் நிகழ்வுகள் மற்றும் பயிற்சிகள், ஆரம்பக்கல்விப் போட்டிகள், மற்றும் மன்றச்செயற்பாடுகள், மாணவத் தலைமைத்துவச் செயற்பாடுகள், செயற்பட்டு மகிழ்வோம் போட்டிகள், தமிழ்த்தினப்போட்டிகள், போன்றன சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (இவை தொடர்பான விபரங்கள் சிறப்புப் பரிசுப்பட்டியலில் தரப்பட்டுள்ளன.)

**மாணவர் நலன்புரிச் செயற்பாடுகள்**

கவின்நிலையுடையதும் பல்திறன் ஆளுமையுடைய மாணவர்களை உருவாக்கக் கூடியதுமான சிறந்த பாடசாலையாக மாற்றும் செயற்றிட்டத்தினை முன்னெடுத்து வருகின்றோம். உதவிகள் தேவைப்படும் மாணவர்களுக்கு பலவிதமான உதவிகள் பெற்றுக்கொடுக்கப்படுகின்றன. ஜனாதிபதிப் புலமைப்பரிசில் உதவித்திட்டத்தில் மாதாந்தம் 3000 ரூபா வீதம் கல்வி கற்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயது வரைக்கும் 8 மாணவர்களுக்கு உதவிகள் பெற்றுக் கொடுக்கப்படுகின்றன. இவ்வாண்டு மற்றுமொரு பாரிய உதவித்திட்டமாக ரோட்றிக் கழகத்தின் ஊடாக 77 மாணவர்களுக்கு தலா 15000 பெறுமதியிலான (மொத்தப் பெறுமதி1155000) கற்றல் உபகரணங்கள் மற்றும் உடை, மெட்ரஸ், பாதணி, புத்தகப்பை நுளம்புவலை என்பன பெற்றுக் கொடுக்கப்பட்டன. உதவி தேவைப்படும் மாணவர்களுக்கு பிரதேச சபை மற்றும் பிரதேச செயலம் என்பவற்றின் ஊடாக கற்றல் உபகரணங்கள் பெற்றுக் கொடுக்க்பட்டுள்ளன. மேலும் தனிநபர்களிடமும் உதவிகளுக்கு வழிப்படுத்தப்பட்டுள்ளது.

## சூழ்நிலைப் பகுப்பாய்வு

### பாடசாலையின் பலங்கள்

- க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சித்திவீதம் அதிகரிக்கின்றமை.
- சமய, சமூக, கலாசார, ஒழுக்கவியல் பேணப்படல் மேம்படுத்தப்படுகின்றமை.
- சமூகத்துடன் இணைந்து சமூகத்தை உள்வாங்கி பயணிக்கின்றமை.
- பௌதிகவளம் மற்றும் கவின்நிலைப்படுத்தல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.
- பாரியளவிலான மைதானம் உள்ளமை (64 பரப்பு வரையில்)
- சிறப்பான ஆசிரியர் வளம் உள்ளமை.
- பழையமாணவர்கள் நலன்விரும்பிகளது ஒத்துழைப்புகள்

### பாடசாலையின் வாய்ப்புக்கள்

- தேவையான பௌதிக வளங்களை பெற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளமை.
- நவீன கற்பித்தல் சாதனங்கள் மல்ரிமீடியா சிமாட் வகுப்பறைத் தொகுதி உள்ளமை.
- பெற்றோர்களை முழுமையான பங்குதாரர்களாக இணைந்து செயலாற்றுகின்ற உபாயங்கள் முன்னெடுக்கப்படுகின்றமை.
- கண்காட்சிகள், களப்பயணங்கள் போன்ற கற்றல் மேம்பாட்டு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலையின் பலவீனங்கள்

- கணினி வசதிகளின்மை.
- வகுப்பறைகள் பற்றாக் குறையாகவுள்ளமை,
- மூடப்படாத வகுப்பறைகள்.
- பாதுகாப்பாக மூடப்பட்ட வசதியான மண்டபம் இன்மை.
- ICT அறிவுடன் சிமாட் (SMART) திறனுடைய மனிதவள விருத்தி குறைவாகவுள்ளமை.
- நூலக கட்டடம் இன்மை.

## பாடசாலையின் சவால்கள்

- எழுத்தறிவு, வாசிப்பு என்பவற்றில் சில மாணவர்கள் பின்தங்கியிருத்தல்.
- ஒழுங்கீனப் பிரச்சினைகள் உள்ள சில மாணவர்கள் காணப்படல்.
- வரவு ஒழுங்கீனப் பிரச்சினைகள் காணப்படுகின்றமை
- 3 கிலோமீற்றர் சுற்றாடலுக்குள் போட்டியாக ஆரம்ப வகுப்புடைய 5 பாடசாலைகள் காணப்படல்.
- எதிர்காலத்தில் மாணவர் சேர்வு வீதம் குறைவடையும் நிலைமைகள்.
- ஆசிரியர் பற்றாக்குறை குறிப்பாக ஆரம்பக்கல்வி ஆங்கிலம், மற்றும் புவியியல் வரலாறு, கணிதவிஞ்ஞானம் போன்றன.

## பாடசாலையின் தேவைகள்

- கணினிகள் 10 வரையில்
- லெமினேற்றிங் மிஷின், கலர்ப் பிரின்ரர்
- சிமாட் வகுப்பறை கட்டமைப்பும் உபகரணங்களும்
- வகுப்பறைக் கட்டடம்
- மேடைப்பகுதி திருத்தம் செய்தல்.
- கைகழுவும் நிரந்தர தொகுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்கால அபிவிருத்தித் திட்டங்கள்

## கல்வி அபிவிருத்திக்காக

1) எழுத்து வாசிப்புத் திறனை நூறு வீதம் பேண தனித்துவமான செயற்றிட்டம்.
2) வாசிப்புத்திறனை மேம்படுத்த வகுப்புக்கள் தோறும் தற்காலிக / தொங்கு நூலகங்களை உருவாக்குதல்.
3) "கல்வியின் நிறைவு ஒழுக்கம்" என்பதற்கு அமைய வாராந்தம் மனித மேம்பாட்டு ஒழுக்கக் கல்வியை வழங்குதல் மற்றும் அறநெறிப் பாடசாலைகளுக்கு வழிப்படுத்தல்.
4) புலமைப் பரிசில் சித்தி வீதத்தை அதிகரிக்க தரம் 3 இருந்து விசேட செயற்றிட்டங்கள்.
5) க.பொ.த. (சா.த) பெறுபேறுகளை அதிகரிக்கும் 9A செயற்றிட்டம்.
6) கற்றல் விளிம்பு நிலையில் உள்ளோருக்கான செயற்றிட்டம்.

## மனித வள அபிவிருத்திக்காக

1) ஆசிரியர்களுக்கான சிங்கள மொழிவிருத்தி, கணினி விருத்தி, சிமாட் வகுப்பறை தொடர்பான செயற்றிட்டங்களை முன்னெடுத்தல்.
2) விளையாட்டு பயிற்றுவிப்பாளர்களிற்கான விசேட பயிற்சி நெறி செயற்றிட்டங்கள்.
3) பெற்றோர் தரவிருத்தி செயலமர்வுகளை மாதாந்தம் முன்னெடுத்தல்.
4) இளைஞர், யுவதிகளுக்கான விழிப்புணர்வு செயற்றிட்டங்கள்.

## பௌதீக வள விருத்தி நோக்கி

1) புதிய கணினிகளைப் பெற்று கணினிக் கூடத்தை இயக்குதல்.
2) சிமாட் வகுப்பறைக்களை உருவாக்குதல்.
3) 30 x 20 அடி நீள அகலத்தில் ஒரு புதிய நூலக கட்டிடத்தை அமைத்தல்.
4) வாகனத்தரிப்பிடத்தை விரிவாக்குதல்.
5) கைகழுவும் தொகுதி அமைத்தல்.
6) பாடசாலைக்குள் அழகிய பாதையை அமைத்தல்.
7) பிரதான மண்டபத்தை நெற் (வலை) அமைத்து பாதுகபப்பும் அழகுமுடையதுமாக அமைத்தல்.
8) அழகிய பூந்தோட்டங்களை உருவாக்குதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலையின் அண்மைக்கால சாதனைகள்

எமது பாடசாலை மாணவர்கள் அண்மைக்காலங்களில் கல்வியிலும், விளையாட்டிலும் மற்றும் பல்வேறு இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் பல்வேறு விதமான சாதனைகளைப் பெற்று வருகின்றனர். அவற்றில் சிறந்தவற்றை இத்தொகுப்பாக்கத்தில் குறிப்பிடுவது சாலச் சிறந்ததாகும்.

**க.பொ.த. சாதாரணதரம்**

2018 - 5A 2B 2C

2019 - 5A 4B

2020 - 8A C

2021 – 9A, மற்றும் 8A,B

2022 – 7A.B,C

2023 – 9A இருவர்

**க.பொ.த.சாதாரண தரப் பரீட்சை – 2022(2023) சிறந்த பெறுபேறுகளை பெற்று பாடசாலைச் சமூகத்திற்கு பெருமை சேர்த்த மாணவர்கள்**

1. இராமச்சந்திரன் செந்தூரன் - 7A.B,C
2. ஆனந்தராசா சிந்து - 7A.B,C
3. தம்பிரத்தினம் தமிழினி - 6A.B,C,S

**க.பொ.த.சாதாரண தரப் பரீட்சை – 2023(2024) வரலாற்றுச் சாதனை**

மணிசேகரம் திவ்வியா - 9A

மணிசேகரம் திலானி - 9A

**விளையாட்டுப் போட்டி 2024 வெற்றியீட்டிய மாணவர்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*** மகாணமட்ட அரைமரதன் போட்டியில்**

18 வயதுப் பிரிவில்

1. சந்திரசேகரம் தனுசியா் 3 ஆம் இடத்தையும்
2. அன்பழகன் கார்த்திகா 7 ஆம் இடத்தையும் பெற்று தேசிய மட்டப் போட்டிக்கு தெரிவாகி சாதனை படைத்து பாடசாலைச் சமூகத்திற்கு பெருமை சேர்த்தள்ளனர்.

***மகாணமட்ட விளையாட்டுப் போட்டியில்**

18 வயதுப் பிரிவில்

1. ச. தனுசியா 400 மீற்றர் ஓட்டநிகழ்வில் 2 ஆம் இடத்தையும், 1500 மீற்றர் ஓட்டநிகழ்வில் 3 ஆம் இடத்தையும் பெற்று சாதனை படைத்து பாடசாலைச் சமூகத்திற்கு பெருமை சேர்த்தள்ளனர்.

***அகில இலங்கை நடனப் போட்டி 2023**

மகாணமட்ட கீழ் பிரிவு குழு நடனப்போட்டியில் தி.மதுசா், க.நிதுசா, பா. இனுசா, ம.பிரசன்யா ஆகிய மாணவர்கள் இணைந்து மூன்றாம் இடத்தைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளனர்.

***அகில இலங்கை நடனப் போட்டி 2024**

**எமது பாடசாலை வலயமட்டப் போட்டியில் 2 ஆம் இடத்தை பெற்றுள்ளனர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசில் பட்டியல்

## சிறப்புப் பரிசில் பெறுவோர்

**1. க.பொ.த.சாதாரண தரப் பரீட்சை – 2022(2023) சிறந்த பெறுபேறுகளை பெற்று சிறப்புப் பரிசு பெறுவோர்.**

1. இராமச்சந்திரன் செந்தூரன் - 7A.B,C
2. ஆனந்தராசா சிந்து - 7A.B,C
3. தம்பிரத்தினம் தமிழினி - 6A.B,C,S

**உயர்தரம் கற்கக் தகுதி பெறும் ஏனைய மாணவர்கள்**

4. பரமலிங்கம் துகிந்தா - 3B,2C,3S
5. மயூரதன் கம்சன் - 2B,4C,2S
6. ஞானசேகரம் ஜென்சிகா - 3B,3C,2S
7. உதயகுமார் டிலக்சிகா - A,3B,5C

**2. 2023 தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறு**

**100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களுக்கான பரிசில்கள்**

கிருபாகரன் சபிசன் - 134
சண்முகசீலன் கஜந்தினி - 123
சிவகுமார் தருனியா - 123
தம்பிரத்தினம் பிரதாப் - 110



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 3. விளையாட்டுப் போட்டி 2024 சிறப்புப் பரிசில் பெறுவோர்

| இல | பெயர் | வயதுப்பிரிவு | மட்டம் | நிகழ்வு | இடம் |
|---|---|---|---|---|---|
| 01 | ச. கஜேந்தினி | 12 | கோட்டம் | உயரம் பாய்தல் | 3 |
| 02 | பே. விதுஷா | 16 | கோட்டம் | முப்பாய்ச்சல் | 3 |
| | | | | 400 மீ. ஓட்டம் | 2 |
| | | | | 400x100 அஞ்சல் | 3 |
| | | 16 | வலயமட்டம் | 300 மீ. தடைதாண்டல் | 2 |
| | | | | முப்பாய்ச்சல் | 3 |
| 03 | வே.லக்ஷி | 16 | கோட்டம் | 800 மீ. ஓட்டம் | |
| | | | | 400x100 அஞ்சல் | 3 |
| 04 | ர. தரன்ஜா | 16 | கோட்டம் | 400x100 அஞ்சல | 3 |
| 05 | சு.கஜிதா | 16 | கோட்டம் | 400x100 அஞ்சல | 3 |
| 06 | ச.தனுசியா | 18 | வலயம் | 400 மீ. ஓட்டம் | 1 |
| | | | | 800 மீ. ஓட்டம் | 1 |
| | | | | 1500 மீ. ஓட்டம் | 1 |
| | | | மாகாணம் | 400 மீ. ஓட்டம் | 2 |
| | | | | 1500 மீ. ஓட்டம் | 3 |
| | | | | அரைமரதன் | 3 |
| 07 | அ.கார்த்திகா | 20 | வலயம் | 5000 மீ. ஓட்டம் | 1 |
| | | | | 1500 மீ. ஓட்டம் | 2 |
| | | | | 800 மீ. ஓட்டம் | 3 |
| | | | மாகாணம் | அரைமரதன் | 7 |

### 4. ஏனைய இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் வெற்றிபெற்றுப் பரிசு பெறுவோர் விபரம்

***ஆங்கில தினப்போட்டி 2024**

ஐ.நமித்திரா Hand Writing கோட்டமட்டம் 3 ஆம் இடம்

***தமிழ்த்தினப் போட்டி 2024**

குறுநாடக ஆக்கப்போட்டியில் மேற்பிரிவைச் சேர்ந்த பா. அபிசன் கோட்டமட்டத்தில் 3 ஆம் இடம் பெற்றுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***அகில இலங்கை நடனப்போட்டி 2023**

மாகாணமட்டத்தில் கீழ்ப்பிரிவு குழுநடனம் 3ஆம் இடம் பங்குபற்றி பரிசில் பெறுவோர்கள் பா.இனுஷா, தி.மதுஷா, க.நிதுசா, ம.பிரசன்ஜா

* **அகில இலங்கை நடனப்போட்டி 2024** மட்டத்தில் கீழ்ப்பிரிவு வலயமட்டத்தில் கீழ்ப்பிரிவு குழுநடனம் 2ஆம் இடம் பங்குபற்றி பரிசில் பெறுவோர்கள் கி.சபிசன், க.தர்சிகன், அ.பிரகாஸ், சு.பவிஷன், சி.கேதுசன், மோ.லக்சன்

***அகில இலங்கை கர்நாடக சங்கீதப் போட்டி 2024**

எமது பாடசாலை மாணவர்கள் வலயமட்டத்தில் மேற்ப்பிரிவு குழு இசை 3 ஆம் இடத்தப் பெற்றுள்ளனர்.

**5. வரவு ஒழுங்கான மாணவர்களுக்கான சிறப்புப் பரிசில்கள்**

| இல | பெயர் | தரம் | வரவு வீதம் |
|---|---|---|---|
| 01 | சி. நிதர்சனா | 2 | 100% |
| 02 | சு.யதுர்சா | 2 | 100% |
| 03 | பா.ரோஜனா | 1 | 99% |
| 04 | சு. டிலக்சன் | 2 | 99% |
| 05 | செ.நிரோஜன் | 3 | 99% |
| 06 | த.சுகிர்தா | 10 | 99% |
| 07 | த.சிந்துஜா | 5 | 99% |
| 08 | தே.தர்னி | 2 | 98% |
| 09 | சு.சுதீஷா | 5 | 98% |
| 10 | சி.தேனுஜன் | 8 | 98% |
| 11 | ச.கரன் | 9 | 98% |
| 12 | உ.துசாந்தன் | 10 | 98% |

**6. குறைந்த லீவு பெற்ற ஆசிரியர்களுக்கான பாராட்டுக்கள்**

1. திருமதி. ப.கந்ததர்சினி
2. திருமதி. க.ரூபினி
3. திருமதி வே.றமணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடரீதியான பரிசில்கள்

## 1.ஆரம்பப் பிரிவு பரிசில்கள் பெறுவோர் விபரம்

| இல. | மாணவர்பெயர் | தரம் | தமிழ் இடம் | கணிதம் இடம் | சமயம் இடம் | சுற்றாடல் இடம் | ஆங்கிலம் இடம் |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | வி. டக்ஷாயினி | தரம் 1 | 1ம் | 1ம் | 1ம் | 2ம் | |
| 02 | சு. யதுர்ஷா | தரம் 1 | 3ம் | 2ம் | 1ம் | 1ம் | |
| 03 | தே. தர்ணி | தரம் 1 | 2ம் | ---- | 3ம் | 3ம் | |
| 04 | க. ரிலக்ஷி | தரம் 1 | ---- | 3ம் | ---- | ---- | |
| | | | | | | | |
| 05 | பா. அபிநயன் | தரம் 2 | 1ம் | 1ம் | ---- | 1ம் | |
| 06 | ஸ்ரீ. டர்சிகன் | தரம் 2 | ---- | 1ம் | 3ம் | 2ம் | |
| 07 | ம. அக்ஷயா | தரம் 2 | 2ம் | ---- | 2ம் | 2ம் | |
| 08 | ச. ஜிம்யனா | தரம் 2 | 1ம் | ---- | ---- | ---- | |
| 09 | ந. தர்ணிஸ் | தரம் 2 | 3ம் | 3ம் | ---- | ---- | |
| 10 | தி. வர்ஷா | தரம் 2 | ---- | ---- | 3ம் | ---- | |
| | | | | | | | |
| 11 | ஆ. தர்ஷா | தரம் 3 | 1ம் | 1ம் | 1ம் | 1ம் | 1ம் |
| 12 | சு. ரூபிகா | தரம் 3 | 3ம் | 3ம் | 3ம் | 2ம் | --- |
| 13 | ம. டேனுசன் | தரம் 3 | 2ம் | --- | 2ம் | 3ம் | --- |
| 14 | வி. குவிஸ் | தரம் 3 | --- | 2ம் | --- | --- | 3ம் |
| 15 | சு. சஜிதன் | தரம் 3 | --- | --- | --- | --- | 2ம் |
| | | | | | | | |
| 16 | சு. சுதீசா | தரம் 4 | 1ம் | 1ம் | 1ம் | 2ம் | 3ம் |
| 17 | சு .பிரியங்கா | தரம் 4 | --- | 3ம் | 2ம் | 1ம் | 2ம் |
| 18 | சு. சுதர்சனா | தரம் 4 | 3ம் | 2ம் | 3ம் | 3ம் | --- |
| 19 | ச. டினுசா | தரம் 4 | 2ம் | --- | --- | --- | 1ம் |
| | | | | | | | |
| 20 | த. பிரதாப் | தரம் 5 | 1ம் | 1ம் | 1ம் | 2ம் | 2ம் |
| 21 | கி. சபீசன் | தரம் 5 | 3ம் | --- | 3ம் | 1ம் | 3ம் |
| 22 | ச. கஜேந்தினி | தரம் 5 | --- | 2ம் | 2ம் | 2ம் | --- |
| 23 | ஜெ. மீர்த்தனா | தரம் 5 | 2ம் | --- | --- | --- | 1ம் |
| 24 | சி. தருணியா | தரம் 5 | --- | --- | --- | 3ம் | --- |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இடைநிலைப் பிரிவு பரிசில்கள் பெறுவோர் விபரங்கள்

### தரம் 06

1.) ம.டெசிந்தன் சமயம், தமிழ், கணிதம், சங்கீதம், ICT, சுகாதாரம், பிரயோகத்தொழில்நுட்பம், குடியியல் ஆகிய பாடங்கள் முதலாமிடம்
விஞ்ஞானம், ஆங்கிலம், சிங்களம் ஆகிய பாடங்கள் இரண்டாமிடம்
வரலாறு 3ம் இடம்

2. தி.மதுசா ஆங்கிலம், நடனம் ஆகியபாடங்கள் முதலாமிடம்
கணிதம், சமயம், சுகாதாரம், புவியியல், ஆகிய பாடங்கள் இரண்டாமிடம்
தமிழ், குடியியல், சிங்களம், செய்முறைத்தொழில் நுட்பம் மூன்றாமிடம்

3. ச.கானுஜா வரலாறு முதலாமிடம், தமிழ், குடியியல், இரண்டாமிடம் சமயம், புவியியல், சங்கீதம், ICT, மூன்றாமிடம்.

4. உ.பிரகாஸ் கணிதம் - 2, ஆங்கிலம், சித்திரம், விஞ்ஞானம், ஆகிய பாடங்கள் மூன்றாமிடம்

5. யோ. சியாம் - குடியியல் -3

6. ச. கேனுசன் - சித்திரம் - 2

7. ச.வினோஜா – நடனம் - 2

8.ஜெ.நமித்திரா –சுகாதாரம் - 2, சித்திரம் - 1

### தரம் 07

1.) இ.சக்சிகா - சமயம், தமிழ், கணிதம், சங்கீதம், ICT, சுகாதாரம், குடியியல் வரலாறு, விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்கள் முதலாமிடம் சிங்களம் இரண்டாம் இடம்

2. பா.இனுசா - நடனம், சிங்களம் ஆகிய பாடங்கள் முதலாமிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ், விஞ்ஞானம், ஆங்கிலம், கணிதம், சமயம், சுகாதாரம், வரலாறு, குடியியல், புவியியல், ICT, செய்முறைத்தொழில்நுட்பம் ஆகிய பாடங்கள் இரண்டாமிடம்

3. சு.பவிசன் - வரலாறு, விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம், சித்திரம், செய்முறைத் தொழில்நுட்பம் ICT, ஆகிய பாடங்கள் முதலாமிடம்,

4. சி.தேனுசன் - தமிழ், குடியியல், சுகாதாரம், சமயம் ஆகிய பாடங்கள் மூன்றாமிடம்

5. ர.சஜீப் - சிங்களம் - 3, சித்திரம் - 2

6. ஜெ.மேதினி – சங்கீதம் - 2

7. த.தன்சிகா – நடனம் - 2,

8. மோ.லக்சன் - நாடகமும் அரங்கியலும் -1

9. ச.தனுசியன் - நாடகமும் அரங்கியலும் -1

11.சௌ.சனுசன் -சித்திரம் -1 புவியியல் -1

**தரம் 08**

1. ஆ.அகிலன் - தமிழ் 1, சமயம 1, ஆங்கிலம் 2, கணிதம் 2, விஞ்ஞானம் 2, வரலாறு 3, குடியியல் 3, சித்திரம 2, சுகாதாரம் 3, செயன்முறைத் தொழில் நுட்பம் 2, புவியியல் 2, ICT 3, சிங்களம் 1

2. ச.கரன் - தமிழ் 2, சமயம் 2, கணிதம் 1, விஞ்ஞானம் 1, வரலாறு 1, குடியியல் 2, சுகாதாரம், புவியியல் 1, ICT 3, சித்திரம் 1, செயன்முறைத் தொழில்நுட்பம் 1

3. க.நிதுஷா - ஆங்கிலம் 1, கணிதம் 3, விஞ்ஞானம் 3, தமிழ் 3, வரலாறு 2, குடியியல் 1, சுகாதாரம் 2,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயன்முறைத் தொழில் நுட்பம் 3, புவியியல் 3, சிங்களம் 2, நடனம் 2, சமயம் 3, ICT 2,

4. ம.பிரசன்யா - ஆங்கிலம 2, நடனம் 1,
5. லோ.கவிராஜ்- சித்திரம் 3
6. பா.மதுசன் - நாடகம் 2
7. ச.சுபாசினி – சங்கீதம் 3,
8. ஆ.அனுசா – சங்கீதம் 1
9. ரா.சாமினி - சங்கீதம் 2
10. ஜெ.றேனுகா – நடனம் 3
11. ம.திலக்சன் - நாடகம் 1
12. க.றமணன் - நாடகம் 3

**தரம் 09**

1. உ.துசாந்தன் - தமிழ், சமயம், கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம், சுகாதாரம், சிங்களம், வரலாறு, புவியியல், குடியியல், செயன்முறைத் தொழில் நுட்பம், ICT ஆகிய பாடங்கள் முதலாமிடம்

2. யோ. பிருந்தா- வரலாறு1, குடியியல் 2, ICT 2, கணிதம் 2, சமயம் 3, செயன்முறைத் தொழில் நுட்பம 2, தமிழ் 3, விஞ்ஞானம் 3, ஆங்கிலம் 3

3. ச.டினேஸ்குமார் - கணிதம் 2, ஆங்கிலம், விஞ்ஞானம் 2, சுகாதாரம் 2, சித்திரம 3, வரலாறு 3, புவியியல 2, குடியியல் 2,
4. சு.கஜிதா - சமயம் 2, தமிழ் 2, ஆங்கிலம் 2, வரலாறு 2, சங்கீதம 2, புவியியல் 3, சிங்களம் 2,

5. வே. லக்ஷி - சங்கீதம் 1, சுகாதாரம் 3, சிங்களம் 3
6. த.தரன்ஜா - சித்திரம் 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. உ.மிதிலா - நாடகமும் அரங்கியலும் 1, PTS 3

8. வி.மதுசனா - நாடகம் அரங்கியலும் 3

9. ம.சர்மிலா - நாடகம் அரங்கியலும் 2

**தரம் 10**

1. ச.தர்சிகா - தமிழ் 1, சமயம் 1, கணிதம் 1, ஆங்கிலம் 1, வரலாறு 1, விஞ்ஞானம் 1, வர்த்தகம் 1, சங்கீதம் 1 ICT 1

2. சோ.சுஜித்தா - தமிழ் 2, சமயம் 2, கணிதம் 3, ஆங்கிலம் 2, வரலாறு 2, விஞ்ஞானம் 3, வர்த்தகம் 2, சங்கீதம் 2, ICT 3

3. ப.ரிஷிகேசன் - தமிழ் 3, சமயம் 3, கணிதம் 2, ஆங்கிலம் 3, வரலாறு 3, விஞ்ஞானம் 2, வர்த்தகம் 2, சித்திரம் 2, ICT 2

4. ரா.சாளினி - குடியியல் 1, சங்கீதம் 3,

5. க.சந்தியா - வர்த்தகம் 3, சுகாதாரம் 2

6. பா.அபிசன் - நாடகமும் அரங்கியலும் 2, புவியியல் 2

7. க.விதுசன் - சித்திரம் 1,

8. க.சாரங்கன் - சித்திரம் 3, சுகாதாரம் 3, குடியியல் 2

9. ப.பவித்திரன் - நாடகமும் அரங்கியலும் 1, சுகாதாரம் 1, குடியியல் 3

10. ஆ.அபிசன் - நாடகம் அரங்கியலும் 3

11. யோ.நிதன் - புவியியல் 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தரம் 11**

1. ம.திவ்வியா - சமயம் 1, தமிழ் 1, விஞ்ஞானம் 1, ஆங்கிலம் 1, கணிதம் 2, வரலாறு 1, சங்கீதம் 2, வர்த்தகம்1

2. ம.திலானி - சமயம் 2, தமிழ் 2, விஞ்ஞானம் 2, ஆங்கிலம் 2, கணிதம் 1, வரலாறு 1, சங்கீதம் 1, வர்த்தகம்2 ICT 3

3. சி.விதுர்சனா - சமயம் 3, ICT 3, ஆங்கிலம் 3, வர்த்தகம் 3

4. கு.சுகி - கணிதம் 3, விஞ்ஞானம்3, வரலாறு 3, சங்கீதம் 3, ICT 1,

5. ப.அஜந்தா - சுகாதாரம் 1, தமிழ் 3
6. ச.தனுசா - நாடகமும் அரங்கியலும் 3, குடியியல் 2
7. ம.முகுந்தன் - சித்திரம் 1, குடியியல் 3,
8. வா.தர்சனா - நடனம் 1, குடியியல் 1, சுகாதாரம் 2
9. சி.சஞ்சிகா - நாடகமும் அரங்கியலும் 1,
10. பா.சிந்துசன் - நாடகமும் அரங்கியலும் 3, சுகாதாரம் 3,
11. த.தனுசா - நடனம் 2
12. ச.தனுசிகா - நடனம் 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2024 பரிசளிப்பு விழாவிற்கு உதவிபுரிந்தோர் விபரம்

**பரிசளிப்பிற்கானது**

1) ந.இராசதுரை (அருளமுதீஸ்வரி கல்யாண மண்டபம் பிரான்பற்று) க.பொ.த.சா.தரப் பரீட்சையில் சிறப்புச் சித்தி பெற்ற மாணவர்களுக்கான தங்கப்பதக்கம் (100000 ரூபா பெறுமதியில்)
2) அமரர்.சி.மகேந்திரம் குடும்பத்தினர் பரிசளிப்பு விழா தொகுப்பாக்கத்துக்குரிய அனுசரணை (35,000 ரூபா பெறுமதியில்.)
3) ந.விஜயேந்திரன், ந.சுரேஸ்இந்திரன், அமரர் நடராஜா அன்னபாக்கியம் அறக்கட்டளை ஊடாக க.பொ.த. (சா.த.) (2023) சித்திபெற்ற மாணவர்களுக்கான பரிசில்கள்
4) கந்தசாமி தேவகுமார் - இத்தாலி – பரிசில்கள்
5) சண்முகநாதன் பாலச்சந்திரன் - உதயா மிக்கசர் கொப்பனி, பிரான்பற்று, பண்டத்தரிப்பு. - 21 பதக்கங்கள் (மெடல்) அன்பளிப்பு. மற்றும் சிறப்புப் பரிசில்கள்
6) த. ரமேஸ் அருள்முருகன் காட்பெயார் பிரான்பற்று - பரிசுப்பொருள் 2000 ரூபா பெறுமதியில்.
7) ந.கனகதாஸ் - டினோசன் காட்வெயார், பண்டத்தரிப்பு - பரிசுப்பொருள்
8) சிங்கராசா றீகன் - றீகன் ஹகட்வெயார் பரிசுப்பொருட்கள்
9) பரிசளிப்பு விழாவிற்கான (30000 ரூபா பெறுமதியிலான) 20 புத்தகப்பைகள் ஞானசேகரம் தங்கமலர் அவர்களால் வழங்கிவைக்கப்பட்டது.
10) பரிசளிப்பு விழாவிற்கான புத்தகப்பைகள் 15 (25000 ரூபா பெறுமதியிலான) திரு. கந்தசாமி ஸ்ரீஸ்கந்தராசா அவர்களால் வழங்கிவைக்கப்பட்டது.
11) பரிசளிப்பு விழாவிற்கான புத்தகப்பைகள் 15 (20000 ரூபா பெறுமதியிலான) திரு. ந.செல்வக்குமார் அவர்களால் வழங்கிவைக்கப்பட்டது.
12) திரு. ந. பகீரதன் பிரான்பற்று பரிசுப் பொருட்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13) திரு. குனரத்தினம் பொண்ணம்பலம் அவர்களால் பரிசளிப்பு விழாவுக்கான 30 புத்தகப் பைகள்(ரூபா 60000 வரையிலான பெறுமதியில் வழங்கப்பட்டது.

14) பனை தென்னை அபிவிருத்திச் சங்கம் பண்டத்தரிப்பு பரிசுப் பொருட்கள் (5000) பெறுமதியில்

15) ஸ்ரீ முத்துமாரி பல்பொருள் வணிகம் பண்டத்தரிப்பு பரிசுப் பொருட்கள் (5000 ரூபா பெறமதியில்)

**16** திரு. ஏகாம்பரம் லிங்கேஸ்வரன் பரிசுப் பொருட்கள் 150 கொப்பிகள்

**பரிசளிப்பு விழாவிற்கு சேவை புரிந்தோர் விபரம்**

1) த.சுரேஸ், தவிசன் பந்தன், பிரான்பற்று – பந்தல் மற்றும் மேடை

2) ஏகாம்பரம் லிங்கேஸ்வரன் - கதிரை வாடகையின்றி உதவி.யமை

3) க.லுசிந்தன், தினேஸ் சவுண்ட், பிரான்பற்று,ஒலியமைப்பு உதவி.

4) காண்டீபன் அனுஷா - பழையமாணவி - பிரான்பற்று சிற்றுண்டிக்கான அனுசரணை.

5. க. றமேஸ் - பழையமாணவன் - பிரான்பற்று, பண்டத்தரிப்பு சிற்றூண்டிக்கான அனுசரனை

*(தாமதமாக கிடைத்த உதவிகள் அடுத்த தொகுப்பாக்கத்தில் பதிவிடப்படும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2023 – 2024 (31.12.2024 வரை) **பாடசாலைக்கு உதவிகள் புரிந்தோர்கள் வரிசையில்**

* **13.03.2024** - விளையாட்டுப் போட்டிக்கான அனைத்துப் பொருட்களும் திருமதி.அனுஷா காண்டீபன் அவர்களால் வழங்கிவைக்கப்பட்டது.

* விளையாட்டுப் போட்டிக்கான பரிசுப் பொருட்கள் திரு.ச.பாலச்சந்திரன் அவர்களால் வழங்கிவைக்கப்பட்டது.

* விளையாட்டுப் போட்டிக்கான ஒலியமைப்பு பத்மஸ்ரீ சவுண்ட் அமைப்பினரால் வழங்கிவைக்கப்பட்டது.

* விளையாட்டுப் போட்டிக்கான பந்தல்சேவை தபிசன் பந்தல் மற்றும் அம்பாள் பந்தல் அமைப்பினரால் வழங்கிவைக்கப்பட்டது.

* விளையாட்டுப் போட்டிக்கான மைதான சுத்திகரிப்புக்கான செலவுகள் திரு.ச.இரத்தினசிங்கம் அவர்களால் முன்னெடுக்கப்பட்டது.

* விளையாட்டுப் போட்டிக்கான தங்கப்பதக்கம் இரண்டு திரு.கா. இராசதுரை அவர்களால் வழங்கிவைக்கப்பட்டது.

* விளையாட்டுப் போட்டிக்கான வெற்றிக் கேடயங்கள் பனை, தென்னை அபிவிருத்தி சங்கத்தினால் வழங்கிவைக்கப்பட்டது.

* விளையாட்டுப் போட்டிக்கான கதிரை உதவி ஏ.லிங்கேஸ்வரன் அவர்களால் வழங்கிவைக்கப்பட்டது.

* விளையாட்டுப் போட்டிக்கான வாகன சேவை ஆனந்தன் ரதம் அமைப்பினரால் வழங்கிவைக்கப்பட்டது.

* **02.04.2024** - பாடசாலைக்கு பிளாஸ்ரிக் நீர்த்தாங்கி (water tank) நடராஜா அன்னபாக்கியம் அறக்கட்டளை சார்பில் திரு.ந.விஜயேந்திரன் அவர்களால் வழங்கிவைக்கப்பட்டது.

* **02.04.2024** பாடசாலைக்கு சுத்திகரிப்பு இயந்திரம் (water jet Wash - Jet cleaner) நடராஜா அன்னபாக்கியம் அறக்கட்டளை சார்பில் திரு.ந.விஜயேந்திரன் அவர்களால் வழங்கிவைக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறிய உள்ளக நடைபாதை அமைப்பதற்கான உதவிகள்

* **05.04.2024** - சீமெந்துபாக் ஒன்று இராசரத்தினம் பிரதீபன் அவர்களால் வழங்கிவைக்கப்பட்டது.

* **08.04.2024** - ஒரு டிரக்டர் மணல் கருணாகரானந்தசிவம் சுதாகரன் அவர்களால் வழங்கிவைக்கப்பட்டது.

* **24.04.2024** - நடைபாதைக்கான கூலி உதவி N.கனகதாஸ் டினோசன் அவர்களால் வழங்கிவைக்கப்பட்டது.

* நடைபாதைக்கான கூலி உதவி தங்கராசா றதீபன் அவர்களால் வழங்கிவைக்கப்பட்டது.

* - நடைபாதைக்கான 3பாக் சீமெந்து 1 லான்மாஸ்டர் மணல் சிங்கராசா றீகன் அவர்களால் வழங்கிவைக்கப்பட்டது.

* **26.04.2024** - 1 டிரைக்டர் கருங்கல் காந்தராசா கார்த்தீபன அவர்களால் வழங்கிவைக்கப்பட்டது.

* **29.06.2024** - சீமெந்து பை 1 , ஒரு டிரக்டர் கருங்கல்தூள் கோபாலப்பிள்ளை ஜெயரூபன் அவர்களால் வழங்கிவைக்கப்பட்டது.

* 1 டிரக்டர் மணல் கருணாகரானந்தசிவம் சுதாகரன் அவர்களால் வழங்கிவைக்கப்பட்டது.

* சீமெந்து பாக் மற்றும் பெயின்றிங் வேலை நா.தவனேசன் அவர்களால் வழங்கிவைக்கப்பட்டது.

* சீமெந்து பை 1 ந.தேவானந்தன் அவர்களால் வழங்கிவைக்கப்பட்டது.

* ஒரு லோட் (டிப்பர்) மணல் இராசரத்தினம் றமேஸ்குமார் அவர்களால் வழங்கிவைக்கப்பட்டது.

* **10.04.2024** - மலசலகூட சுத்திகரிப்புக்கான நிதியுதவி (30000 ரூபா) வி.கோமதி அவர்களால் திரு தேவநாதன் ஊடாக வழங்கிவைக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* **10.04.2024** $A_4$ றீம் 03 திரு.ந.செல்வகுமார் அவர்களால் வழங்கிவைக்கப்பட்டது.

* **10.04.2024** $A_4$ றீம் 02 திரு.அ.மங்களேஸ்வரன் அவர்களால் வழங்கிவைக்கப்பட்டது.

* **22.04.2024** - O/L Past pass paper book மற்றும் தரம் 5 புலமைப்பரிசில் புத்தகங்கள் திரு.ந.செல்வகுமார் அவர்களால் வழங்கிவைக்கப்பட்டது.

* **02.05.2024** - Bluetooth speaker திருமதி.சி.சொரூபினிதேவி, திருமதி.சி.பிருந்தா ஆகிய ஆசிரியர்களால் வழங்கிவைக்கப்பட்டது.

* மாபிள் கப் 06 ஜீன் ஆசிரியரால் வழங்கிவைக்கப்பட்டது.

* $A_4$ றீம் 01 திருமதி.சு.ஜெயதர்சினி ஆசிரியரால் வழங்கிவைக்கப்பட்டது.

* **25.06.2024 - போட்டோப்பிரதி இயந்திரம் திருமதி. குணசேகரம் சிந்துஜா பழையமாணவி (நெதர்லாணட்) அவர்களால் வழங்கிவைக்கப்பட்டது.**

**<u>கண்காட்சி தொடர்பான உதவிகள்</u>**

* **18.07.2024** - கண்காட்சிக்கான பொருட்கள் உதவி இராசேந்திரம் தினேஸ் (அமெரிக்கா) அவர்களால் வழங்கிவைக்கப்பட்டது.

* **20.06.2024** - கண்காட்சிக்கான பொருட்கள் உதவி திருமதி.செ.சற்குணராசா ஆசிரியர் அவர்களால் வழங்கிவைக்கப்பட்டது.

* கண்காட்சிக்கான பொருட்கள் திருமதி.க.சுமாலினி ஆசிரியர் அவர்களால் வழங்கிவைக்கப்பட்டது.

* கண்காட்சிக்கான பொருட்கள் தரம் 10 மாணவன் செல்வன் செ.விதுசன் அவர்களால் வழங்கிவைக்கப்பட்டது.

* கண்காட்சிக்கான பொருட்கள் தரம் 11 மாணவன் செல்வன் க.விதுசன் அவர்களால் வழங்கிவைக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* கண்காட்சிக்கான பொருட்கள் தரம் 10 மாணவன் செல்வன் சு.தர்சன் குடும்பத்தினரால் வழங்கிவைக்கப்பட்டது.

* 12.10.2024 – வாணிவிழாவில் நவராத்திரி போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்கள் (கற்றல் உபகரணங்கள்) விநாயகர்ஸ்ரோர்ஸ் உரிமையாளர் பாலேந்திரன் அவர்களால் வழங்கிவைக்கப்பட்டது.

* மாணவருக்கான கற்றல் உபகரணங்கள் - திருமதி ப. கந்ததர்சினி ஆசிரியர்

**16)** பவளராசா ஸ்ரீபன் - பழைய மாணவன் - கனடா தொலைபேசி மின்சாரக்கட்டண உதவிகள்

### அண்மைக்கால உதவிகள்

* **நீர்த்தாங்கி புனரமைப்பு -** ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் சிபார்சில் பன்முகப்படுத்தப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்ட நிதியில் (ரூபா 188000 வரையில்) சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தால் வழங்கப்பட்டது

* **நடைபாதை அமைத்தல் -** முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் அவர்களது சிபார்சில் பன்முகப்படுத்தப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்ட நிதியில் (ரூபா 500000 வரையில்) சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தால் வழங்கப்பட்டது.

* **சிமாட் வகுப்பறை புனரமைப்பு** – GEMP நிகழ்ச்சித்திட்ட IT&Language Room புனரமைப்பில் (ரூபா 700000 வரையில்) வலயக்கல்வி அலுவலகத்தால் வழங்பப்பட்டது.

* **சிமாட் உபகரணங்கள் வழங்கல்** – IT&Language Room அமைத்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக போட்டோ பிரதி இயந்திரம் மற்றும் சிமாட் பனல் போட் (ரூபா 1000000 இற்கு மேல்) வலயக்கல்வி அலுவலகத்தால் வழங்பப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை மன்றங்கள்

1. **இந்து மாணவர் மன்றம்**

| | | |
|---|---|---|
| தலைவர் | - | ச.பவித்திரன் |
| செயலாளர் | - | ச.தர்சிகா |
| உபதலைவர் | - | க.நிதுர்சன் |
| உபசெயலாளர் | - | ம.தனுசா |
| பொருளாளர் | - | சி.விதுசனா |
| பொறுப்பாசிரியர் | - | திருமதி.வி.சோமகோஜனி |

2. **சிரேஷ்ட மாணவர் மன்றம்**

| | | |
|---|---|---|
| தலைவர் | - | பா.அபிசன் |
| செயலாளர் | - | சு.கஜிதா |
| உபதலைவர் | - | ச.டினேஸ்குமார் |
| உபசெயலாளர் | - | யோ.பிருந்தா |
| பொறுப்பாசிரியர் | - | திருமதி.வி.ஜெயராசா |

3. **தமிழ் மாணவர் மன்றம்**

| | | |
|---|---|---|
| தலைவர் | - | பா.ரிசிகேசன் |
| செயலாளர் | - | ச.சந்தியா |
| உபதலைவர் | - | சு.கஜிதா |
| உபசெயலாளர் | - | பே.விதுசா |
| பொறுப்பாசிரியர் | - | திருமதி. க.பத்மராஜா |

4. **அழகியல் மாணவர் மன்றம்**

| | | |
|---|---|---|
| தலைவர் | - | ரா.சாளினி |
| செயலாளர் | - | ச.சந்தியா |
| உபதலைவர் | - | சு.கஜிதா |
| உபசெயலாளர் | - | ம.பிரசன்ஜா |
| பொறுப்பாசிரியர் | - | திருமதி.க.அனுசலா |

5. **சுகாதார மன்றம்**

| | | |
|---|---|---|
| தலைவர் | - | ஆ.அபிசன் |
| செயலாளர் | - | வே.லக்சி |
| உபதலைவர் | - | ஆ.தர்சன் |
| உபசெயலாளர் | - | த.தரன்ஜா |
| பொறுப்பாசிரியர் | - | திரு.சி.பிரதாப் |

6. **உளவியல் மன்றம்**

| | | |
|---|---|---|
| தலைவர் | - | சோ.சுஜிதா |
| செயலாளர் | - | த.தரன்ஜா |
| உபதலைவர் | - | ச.டினேஸ்குமார் |
| உபசெயலாளர் | - | ஆ.தர்சன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுப்பாசிரியர் - திருமதி.கே.றாஜி

7. **கணித விஞ்ஞான மன்றம்**

தலைவர் - யோ.நிதன்
செயலாளர் - அ.விதுசன்
உபதலைவர் - சு.கஜிதா
உபசெயலாளர் - ச.சக்சிகா
பொறுப்பாசிரியர் - திருமதி.வி.நாகேஸ்வரி

8. **ஆங்கில மாணவர் மன்றம்**

தலைவர் - உ.துசாந்தன்
செயலாளர் - ச.தர்சிகா
உபதலைவர் - ஆ.அகிலன்
உபசெயலாளர் - க.நிதுசா
பொறுப்பாசிரியர் - திரு.ம.சந்துரு

## சின்னத்துரை மகேந்திரம் அவர்களது மகாத்தான பணிகள் சில..

**தகவல் தொகுப்பு,**
**திருமதி க. ரூபினி,**
**ஆசிரியர்.**

1947 இல் பிரான்பற்றில் சின்னத்துரை சரஸ்வதி தம்பதியினருக்கு புத்திரனாகப் பிறந்தார். யா/பன்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க.த.பாடசாலையிலும் யா/பண்டதரிப்பு இந்தக்கல்லூரியிலும் கற்றதுடன் வெளிவாரிப் பட்டதாரியாக கல்வியில் உயர்ச்சி பெற்று பொதுத் தொண்டுகளிலும் மக்கள் சேவைகளிலும் அக்கறை கொண்டு செயற்பட்டார்.

பண்டதரிப்பு கிராமிய வங்கியின் காசாளராக பணிக்கமர்ந்து சிறந்த சேவையால் தங்கப்பதக்கம் (1996) பெற்றதுடன் முகாமையாளராக உயர்வு பெற்று 25 வருடங்கள் அவ்வங்கித்துறையில் பணியாற்றினார்.

யா/பிரான்பற்று கலைமகள் வித்தியாலயத்திற்கு ஒரு பகுதி காணியைப் பெற்று ஊர்மக்களின் உதவியுடன் நூறு அடிக் கட்டிடம் அமைக்க வழிகோலி பெரும்பங்காற்றியதாக அறியமுடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமத்தின் பல அமைப்புகளிலும் முன்னின்று செயற்பட்டதுடன் பிரான்பற்று கிராம அபிவிருத்திச் சங்கத்தின் உறுப்பினராகவும் தலைவராகவும் பணியாற்றினார். மேலும் கால்நடை வளர்ப்பு அபிவிருத்திச் சங்கம், மாதர்சங்கம் என்பவற்றிலும் இணைந்து செயற்பட்டார். அமரர் காசிப்பிள்ளை அவர்களது நிலங்களைப் பெற்று மக்களின் பயன்பாட்டிற்க உரியதாக்கி ஆயுள்வேத வைத்தியசாலை, தொழிற்பயிற்சி நிலையம், ஸ்ரீமருகன் முன்பள்ளி, சமுர்த்தி வங்கி, ஆரம்ப சுகாதார நிலையம், கிராமசேவையாளர், மற்றும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் அலுவலகங்கள் அமைக்க வழிகோலி அரும்பணி புரிந்தார்.

இவ்வாறு பொதுப்பணிகளில் ஈடுபட்டு வந்ததுடன் 2015 ஆம் ஆண்டு வலிதென்மேற்கு பிரதேச சபையின் உள்ளூராட்சித் தேர்தலில் வெற்றி பெற்று உறுப்பினரானார். சில காலங்கள் உப தவிசாளராகவும் பணியாற்றினார். பிரதேச சபையில் பணியாற்றிய காலப்பகுதியில் காக்கதீவுப் பகுதியில் முறையற்ற விதத்தில் குப்பைகள் கொட்டப்படுவதனால் ஏற்படும் பாதிப்புகள் தொடர்பில் வெளிக்கொண்டுவந்து எதிர்ப்பு ஆர்பாட்டங்களில் ஈடுபட்டதுடன் சட்டரீதியாகவும் நடவடிக்கைகளை முன்னெடுத்தார். மேலும் பிரான்பற்று கிராமத்தில் திருத்தப்படாதிருந்த பல வீதிகளைத் திருத்தியதுடன் வீதியோர மின்விளக்குகளை பொருத்துவதற்கு வழியேற்படுத்தினார். விளாவெளி இந்து மயானத்திற்கு நிர்வாகசபை அமைப்பை உருவாக்கி மயானப் புனரமைப்புகளை முன்னெடுத்தார்.

பிரான்பற்று கிராமத்தில் எள்ளுச் சங்கத்திற்கான கட்டிடம் ஒன்றை உருவாக்க உழைத்தார். சரஸ்வதி சனசமூக நிலையத்தின் தலைவராகவும் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவராகவும் பணியாற்றினார்கள். வடக்கு மகாண தந்தை செல்வா தந்தை நற்பணி மன்றத்தின் பொறுப்பாளராக விளங்கியதுடன் 2019 இல் தந்தை செல்வா நற்பணி மன்றத்தாலும் கௌரவிக்கப்பட்டார். பல பணிகளில் தன்னை அர்பணித்து வந்த சின்னத்துரை மகேந்தின் நோயின் பிடியால் இறைவனுக்கு தன்னை அர்பணித்துக் கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலை அபிவிருத் நிறைவேற்றுக் குழு 2024 - 2025

| பதவி | பெயர் | முகவரி |
|---|---|---|
| தலைவர் (அதிபர்) | திரு. சோ. ஸ்ரீகிருஸ்ணா | உதயசூரியன் வீதி உடு சுன்னாகம் |
| பொருளாளர் (ஆசிரியர்) | திரு. இ. கஜேந்திரன் | அம்மன் வீதி பண்டத்தரி |
| செயலாளர் (பெற்றோர்) | திரு.நா.செல்வக்குமார் | பிரான்பற்று பண்டத்தரிப்பு |
| உறுப்பினரகள் (ஆசிரியர்கள்) | திருமதி. க. ரூபினி | நவாலி வடக்கு மானிப்ப |
| | திரு. அ. பிரசன்னா | பண்ணாகம் மேற்கு சுழி |
| | திருமதி. ஜெ. றெஜினா | சண்டிலிப்பாய் மேற்கு, |
| | திருமதி. ப. கந்ததர்சினி | சிவபலம் பத்தாவத்தை இளவாலை |
| உறுப்பினர்கள் (பெற்றோரகள்) | திரு.அ.மங்களேஸ்வரன் | பிரான்பற்று, பண்டத்தரி |
| | திரு.ச. சுவேந்திரன் | பிரான்பற்று, பண்டத்தரி |
| | திரு.சோ.சுதா | பிரான்பற்று, பண்டத்தரி |
| | திருமதி. ப. தர்சனா | பிரான்பற்று, பண்டத்தரி |
| உறுப்பினர்கள் (பழைய மாணவரகள்) | திரு. தே.சிவகுமார் | பிரான்பற்று, பண்டத்தரி |
| | திருமதி ர. சத்தியநிர்மலா | பிரான்பற்று, பண்டத்தரி |
| வலயப் பிரதிநிதி (ஆசிரிய ஆலோசகர்) | திரு. க. சிவகரன் | வலயக்கல்வி அலுவலக வலிகாமம், மருதனார்மட |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2022 க.பொ.த (சா/த) பரீட்சையில் சிறந்த பெறுபேறு



R.Senthuran
(7A, B,C)



A.Sinthu
(7A, B, C)



T.Tamilini
(6A, B,C, S)



பரிசளிப்பு விழாத் தொகுப்பாக்கத்திற்குரிய
முழுமையான அனுசரணை

அமரர் சின்னத்துரை மகேந்திரம்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org